எழுமின்! விழிமின்!!
கருதிய கருமம் கைகூடும்வரை
அயராது உழைமின்!!!



எழுமின்! விழிமின்!!
கருதிய கருமம் கைகூடும்வரை
அயராது உழைமின்!!!

## Ramakrishna Mission Religious School – Golden Jubilee – 1952-2002

(1) கலைநிறை கணபதி சரணம் சரணம்
  கஜமுக குணபதி சரணம் சரணம்
தலைவநின் இணையடி சரணம் சரணம்
  சரவண பவகுஹ சரணம் சரணம்
சிலைமலி யுடையவ சரணம் சரணம்
  சிவசிவ சிவசிவ சரணம் சரணம்
உலைவறு மொருபரை சரணம் சரணம்
  உமைசிவை யம்பிகை சரணம் சரணம்.

ௐ ௐ ௐ ௐ ௐ ௐ ௐ ௐ ௐ

(2) ஓம் சிவாய ஓம் ஓம் சிவாய ஓம்
ஓம் சிவாய ஓம் ஓம் சிவாய ஓம்

பாடுகின்ற பனுவலோர்கள் தேடுகின்ற செல்வமே
நாடுகின்ற ஞானமன்றில் ஆடுகின்ற அழகனே *(ஓம்)*

அத்தனென்ற நின்னையே பத்திசெய்து பனுவலால்
பித்தனின்று பேசவே வைத்ததென்ன வாரமே *(ஓம்)*

சிந்தையன்பு சேரவே நைந்து நின்னை நாடினேன்
வந்து வந்துள் இன்பமே தந்திரங்கு தாணுவே *(ஓம்)*

அண்டரண்டம் யாவும் நீ கொண்டுநின்ற கோலமே
தொண்டர்கண்டு சொரிகணீர் கண்டநெஞ்சு கரையுமே *(ஓம்)*

அன்னைபோல அருள்மிகுந்து மன்னுஞான வரதனே
என்னையே எனக்களித்த நின்னையானும் நினைவனே *(ஓம்)*

ௐ ௐ ௐ ௐ ௐ ௐ ௐ ௐ ௐ

(3) சிவாய நம: ஓம் சிவாய நம:
சிவாய நம: ஓம் நம: சிவாய

ௐ ௐ ௐ ௐ ௐ ௐ ௐ ௐ ௐ

(4) அரஹ ரோஹரா சுவாமி அரஹ ரோஹரா
அரஹ ரோஹரா சுவாமி அரஹ ரோஹரா

திருச்செந்தூர் முருகனுக்கும் அரஹ ரோஹரா
திருத்தணிகை வேலனுக்கும் அரஹ ரோஹரா

பழனிமலை பாலனுக்கும் அரஹ ரோஹரா
சுவாமிமலை கிழவனுக்கும் அரஹ ரோஹரா

கதிர்காம வேலனுக்கும் அரஹ ரோஹரா
கந்தசுவாமிக் கடவுளுக்கும் அரஹ ரோஹரா

கலியுக வரதனுக்கும் அரஹ ரோஹரா
கண்கண்ட தேவனுக்கும் அரஹ ரோஹரா

வெள்ளிமலை வேலனுக்கும் அரஹ ரோஹரா
வள்ளிமண வாளனுக்கும் அரஹ ரோஹரா

ௐௐௐௐௐௐௐௐௐ

(5) பழனி முருகா வேல் முருகா
சரணம் சரணம் வேல் முருகா
கணபதி சோதர வேல் முருகா
கார்த்திகேயா வேல் முருகா
சுப்ரமண்யா வேல் முருகா
அரஹரோஹரா முருகா அரஹரோஹரா
அரோஹரா அரோஹரா அரஹரோஹரா *(பழனி)*

ௐௐௐௐௐௐௐௐௐ

(6) கந்தா உன் பாதார விந்தம் துணை
என் தாயும் தந்தையும் நீயல்லவோ

(வடி) வேலா உன் பாதார விந்தம் துணை (2)
என் தாயும் தந்தையும் நீயல்லவோ

(ஜெகத்) ஈசா உன் பாதார விந்தம் துணை (2)
என் தாயும் தந்தையும் நீயல்லவோ

(சோம) ஸ்கந்தா உன் பாதார விந்தம் துணை (2)
என் தாயும் தந்தையும் நீயல்லவோ

ௐௐௐௐௐௐௐௐௐ

(7) ஜகஜனனி ஜகன் மாதா ஆதிபராசக்தி பாலயமாம் ||
திருமயிலை கற்பகாம்பா ஆதிபராசக்தி பாலயமாம் ||
திருவேற்காட்டில் கருமாரி ஆதிபராசக்தி பாலயமாம் ||
திருக்கடவூர் அபிராமி ஆதிபராசக்தி பாலயமாம் ||
தென்மதுரை மீனாட்சி ஆதிபராசக்தி பாலயமாம் ||
திருக்காஞ்சி காமாட்சி ஆதிபராசக்தி பாலயமாம் ||
திருக்காசி விசாலாட்சி ஆதிபராசக்தி பாலயமாம் ||
திருநெல்லை காந்திமதி ஆதிபராசக்தி பாலயமாம் ||
ஜயராம்பாடி சாரதாம்பா ஆதிபராசக்தி பாலயமாம் ||

ௐௐௐௐௐௐௐௐௐ

(8) எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே அல்லாமல்
வேறொன்றறியேன் பராபரமே.

ॐॐॐॐॐॐॐॐॐ

(9) சலங்கை கட்டி ஓடி ஓடி வாயோ - எந்தன்
கமலக் கண்ணா ஆடி ஆடி வாயோ - நிந்தன்
பிஞ்சுப் பாதம் தேடித் தேடி வந்தோம் - உந்தன்
திவ்ய நாமம் பாடிப் பாடி வந்தோம். *(சலங்கை)*

தேவகி நந்தன ராதா ஜீவன
கேசவா ஹரே மாதவா ||
பூதன மர்தன பாப விநாசன
கேசவா ஹரே மாதவா ||
கோகுல பாலனே ஓடி வாயோ
கோபால பாலனே ஆடி வாயோ *(சலங்கை)*

கம்ஸவிமர்த்தன காளிய நர்த்தன
கேசவா ஹரே மாதவா ||
ஆச்ரித வத்சல ஆபத் பாந்தவ
கேசவா ஹரே மாதவா ||
ஓம்கார நாதமே ஓடி வாயோ
ஆனந்த கீதமே பாடி வாயோ *(சலங்கை)*

அர்ஜுன ரக்ஷக அஞ்ஞான நாசக
கேசவா ஹரே மாதவா ||
பாண்டவ ரக்ஷக பாப விநாசக
கேசவா ஹரே மாதவா ||
கீதாம்ருதமே ஓடி வாயோ
ஹ்ருதயானந்தமே ஆடி வாயோ *(சலங்கை)*

ॐॐॐॐॐॐॐॐॐ

(10) சின்னச் சின்னப் பாதம் வைத்து
கண்ணா நீ வா வா வா, மணிவண்ணா நீ வா வா வா
வண்ண வண்ண உடை உடுத்தி
கண்ணா நீ வா வா வா, மணிவண்ணா நீ வா வா வா

மல்லிகை முல்லை மலராலே
அர்ச்சனை செய்வோம் வா வா வா
மாதவனே மாதவனே || கேசவனே கேசவனே ||
யாதவனே நீ வா வா வா ||
கண்ணா நீ வா வா வா, மணிவண்ணா நீ வா வா வா

திரௌபதி மானம் காத்தவனே
அடியார்க் கருளிட வா வா வா
மாயவனே மாயவனே || கேசவனே கேசவனே ||
யாதவனே நீ வா வா வா ||
கண்ணா நீ வா வா வா, மணிவண்ணா நீ வா வா வா

கண்ணில் தெரியும் காட்சியெல்லாம்
கமலக் கண்ணா உன்னுருவம்
காலமெல்லாம் காலமெல்லாம் உன்னருளை வேண்டுகிறோம்
யாதவனே நீ வா வா வா ||
கண்ணா நீ வா வா வா, மணிவண்ணா நீ வா வா வா
ௐௐௐௐௐௐௐௐௐ

(11) ஸ்ரீராம ஜயராம ஜய ஜய ராம் ஓம்
ஸ்ரீராம ஜயராம ஜய ஜய ராம் ஓம்
ௐௐௐௐௐௐௐௐௐ

(12) ராமக்ருஷ்ண நாமமே நல்கும் சகலஷேமமே
ராமக்ருஷ்ண நாமமே நாசம் செய்யும் பாவமே
பரமஹம்சர் நாமமே பரம பதமாய் ஆகுமே
பரமஹம்சர் நாமமே பக்தி முக்தி ஆகுமே *(ராம)*

பகவான் இராம கிருஷ்ணனை பாடுவோமே கூடியே
அகமும் புறமும் பரமனின் ஆட்சி வேண்டி நாமெல்லாம் *(ராம)*
காமர் புகூர் நகரிலே குதிராம் சந்திர மணியாரின்
நாமம் வாழ மைந்தனாய் நல்ல குழந்தை பிறந்ததாம் *(ராம)*

நாடகத்து மேடையில் நாடி வந்த கூட்டத்தில்
ஆடவந்த வேடத்தில் ஆளும் தெய்வமாகிய *(ராம)*

வயிறு வளர்க்கும் கல்வியை வேண்டாம் என்ற வித்தகன்
உயிரும் உடலும் இறைவனை உணர்வதற்கே என்றவன் *(ராம)*

முன்னம் வந்த வேதத்தை சின்னவரும் அறியவே
வண்ண வண்ண கதைகளால் வழங்கிச் சென்ற நற்குரு *(ராம)*
ௐௐௐௐௐௐௐௐௐ

(13) வீர நரேந்திரா விவேகானந்தா
சரணம் சரணம் குருநாதா
ஜீவ சேவையே சிவ சேவையென
பாதை காட்டி அருள்புரிந்தாய். *(வீர நரேந்திரா)*

இந்து மதத்தின் இணையற்ற பெருமையை
இவ்வுலகெங்கும் பரவச் செய்தாய்
இப்புவி மக்கள் ஏற்புடன் வாழ
இறையருள் ஒன்றே வழி என்றாய் *(வீர நரேந்திரா)*

மனிதனின் ஆற்றல் மலையினும் பெரிதென
மாந்தர்களை நீ உணரச் செய்தாய்
தூய்மையும் தொண்டும் இரு கண்களென
திக்கெட்டும் நீ நன்கு முரசறைந்தாய்! *(வீர நரேந்திரா)*

எழுமின்! விழிமின்! சோதரர்காள்!
எழுமின்! விழிமின்! சோதரிகாள்!
குறிசாரும் வரை நில்லாது செல்மின்!

குறிசாரும் வரை நில்லாது செல்மின்! *(வீர நரேந்திரா)*

ௐௐௐௐௐௐௐௐௐ

(14) ஞான சூர்ய ஸ்வாமி உனக்கு போற்றி போற்றி போற்றி ஓம்
பிரேம சந்த்ர ஸ்வாமி உனக்கு போற்றி போற்றி போற்றி ஓம்
கர்ம வீர ஸ்வாமி உனக்கு போற்றி போற்றி போற்றி ஓம்
தர்ம மூர்த்தி ஸ்வாமி உனக்கு போற்றி போற்றி போற்றி ஓம்

சாகரம் போல் ஆழ பாவ ஸ்வாமி உனக்கு போற்றி ஓம்
வானம் போல விரிந்த மனம் ஸ்வாமி உனக்கு போற்றி ஓம்
கங்கை போல தூய வாழ்வு ஸ்வாமி உனக்கு போற்றி ஓம்
அமுது போல மதுர வசனம் ஸ்வாமி உனக்கு போற்றி ஓம்

அருள் எமக்கு சுத்தபுத்தி ஸ்வாமி உனக்கு போற்றி ஓம்
அருள் எமக்கு சிரத்தை அன்பு ஸ்வாமி உனக்கு போற்றி ஓம்
சகல லோக மான்ய ஸ்வாமி போற்றி உனக்கு போற்றி ஓம்
விவேகானந்த ரூபம் கொண்ட குருதேவ சக்தி ஓம்

போற்றி போற்றி போற்றி ஓம் விவேகானந்தா போற்றி ஓம்.

ௐௐௐௐௐௐௐௐௐ

(15) சக்தி சொரூபம் சாரதா தேவி
சரணம் பணிவோம் புதுமலர் தூவி
பக்தியை யூட்டும் தெய்விகப் பாவை
பகவான் ராமகிருஷ்ணரின் சேவை *(சக்தி)*

காமம் தீண்டாக் காதலின் ஜோதி
கணவன் தவத்தைக் காத்திடும் பாதி
நேமம் தவறா நிர்மல யோகம்
நிறை குணப் பெண்மை நிரந்தர தியாகம் *(சக்தி)*

தன்னலம் கருதாத் தாய்மையின் பீடம்
தபசிகள் தேடும் சாந்தியுன் படம்
மன்னுயிர் யாவிலும் தன்னுயிர் காணும்
மாபெருங் கருணையின் மாட்சிமை பூணும் *(சக்தி)*

சங்கடம் எதையும் சகித்திடும் பொறுமை
சாதனை சேவைகள் புரிந்திடும் திறமை
மங்கையர் குலத்தின் மதிப்பரும் பிறவி
மானிடப் பொதுவிலும் மிகப்பெருந்துறவி *(சக்தி)*

ௐௐௐௐௐௐௐௐௐ

(16) சாரதா அம்மா அம்மா சாரதா அம்மா
சாரதா அம்மா அம்மா சாரதா அம்மா

மக்கள் நாடி வந்தோம் அம்மா சாரதா அம்மா - எம்மை
அணைத்து ஆதரிப்பாய் அம்மா சாரதா அம்மா *(சாரதா)*

ஜீவசேவை செய்து அம்மா சாரதா அம்மா - உந்தன்

ஆசிபெற வேண்டும் அம்மா சாரதா அம்மா *(சாரதா)*

காமக்ரோதம் அகற்றி அம்மா சாரதா அம்மா - எமை
ஆட்கொள்ள வேண்டும் அம்மா சாரதா அம்மா *(சாரதா)*

குற்றம் களையவேண்டும் அம்மா சாரதா அம்மா - சத்வ
குணமே ஓங்க வேண்டும் அம்மா சாரதா அம்மா *(சாரதா)*

எங்கள் தாய் நீ அம்மா சாரதா அம்மா - எமை
காப்பாற்ற வேண்டும் அம்மா சாரதா அம்மா *(சாரதா)*

நான் உந்தன் குழந்தையம்மா சாரதா அம்மா - உந்தன்
மடியினிலே ஏந்திடம்மா சாரதா அம்மா *(சாரதா)*

வேறு யாரும் இல்லையம்மா சாரதா அம்மா - நீயே
எங்களுக்குத் துணையம்மா சாரதா அம்மா *(சாரதா)*

நீ எனக்கே உரிமை அம்மா சாரதா அம்மா - தாயே
நான் உனக்கே உடமையம்மா சாரதா அம்மா *(சாரதா)*

சொல்லும் சொற்களைக் கேட்பேன் அம்மா சாரதா அம்மா - நல்ல
வழியில் நான் நடப்பேன் அம்மா சாரதா அம்மா *(சாரதா)*

பாதம் பணிவோம் அம்மா சாரதா அம்மா - உந்தன்
பாதம் பிடித்தோம் அம்மா சாரதா அம்மா *(சாரதா)*

தாயே அபயம் அபயம் அபயம் அம்மா சாரதா அம்மா
தாயே சரணம் சரணம் சரணம் அம்மா சாரதா அம்மா.

ॐ ॐ ॐ ॐ ॐ ॐ ॐ ॐ ॐ

(17) ஆரிராரி ராரோ ஆரிராரி ராரி ராரோ ||
**ஹிந்து என்று சொல்லு - நீ ஹிந்துவாக வாழு**
**நாமெல்லோரும் ஒன்று நாம் வாழுவோம் ஒன்றாக**

*உலக அமைதி வரும் உள்ளமெல்லாம் தூய்மை வரும்*
*அன்பே ஆளவந்தால் அழிவுக்கெல்லாம் முடிவு வரும்*
*பாரதம் பார்த்ததடி கற்பனைகள் இல்லையடி*
*அஹிம்சை ஆளவந்தால் ஹிம்சைக்கெல்லாம் முடிவுவரும்*
**ஹிந்து என்று சொல்லு - நீ ஹிந்துவாக வாழு**
**நாமெல்லோரும் ஒன்று நாம் வாழுவோம் ஒன்றாக** *(ஆரி)*
*புனிதத் தன்மை வரும் உற்சாகம் ஓடி வரும்*
*கர்மயோகத்தினால் தூய்மை உன்னைத் தேடி வரும்*
*கண்ணன் சொன்னதடி கற்பனைகள் இல்லையடி*
*தர்மம் ஆளவந்தால் போருக்கெல்லாம் முடிவு வரும்*
**ஹிந்து என்று சொல்லு - நீ ஹிந்துவாக வாழு**
**நாமெல்லோரும் ஒன்று நாம் வாழுவோம் ஒன்றாக** *(ஆரி)*
*மாயை மறைந்துவரும் மாயவனை நினைத்திருந்தால்*
*பாதை தெரிந்துவரும் பரம்பொருளை பற்றுதற்கு*
*புத்தனை நினைத்துவிடு புத்தனாக மாறிடுவாய்*

*துறவியர் சொன்னதடி கற்பனைகள் இல்லையடி*
**ஹிந்து என்று சொல்லு - நீ ஹிந்துவாக வாழு**
**நாமெல்லோரும் ஒன்று நாம் வாழுவோம் ஒன்றாக** *(ஆரி)*
*தொண்டு உள்ளம் வரும் தியாக மலர் பூத்திருக்கும்*
*வள்ளல் தன்மையினால் கர்ணனாக உயர்ந்திடுவாய்*
*இலட்சியப் பிடிப்புவரும் துறவிகளின் நினைவு வரும்*
*பார்க்கும் இடத்திலெல்லாம் பரம்பொருளின் உருவம்வரும்*
**ஹிந்து என்று சொல்லு - நீ ஹிந்துவாக வாழு**
**நாமெல்லோரும் ஒன்று நாம் வாழுவோம் ஒன்றாக** *(ஆரி)*
ௐௐௐௐௐௐௐௐௐ

(18) இந்து சமய மக்களெல்லாம் ஒன்று சேருவோம்
பந்தத்தோடு இணக்கமாக வாழ்ந்து காட்டுவோம்
எந்த மதமும் இதற்கு ஈடு இல்லை என்னுவோம்
முந்து புகழ் இந்து தர்மம் முழங்கச் செய்குவோம் *(இந்து)*

ஆதி ஆதி காலந்தொட்டு வந்த மதமிது
ஆதிமூல நாயகனைக் கண்ட மதமிது
ஓதி ஓதி உண்மைதனை உரைத்த மதமிது
நீதிதேவன் கோயில்கொண்டு நிலைத்த மதமிது *(இந்து)*

பெற்றதாயை பிறந்தமக்கள் வெறுப்பதுமுண்டோ
உற்ற தந்தை இல்லையென்று உரைப்பவருண்டோ
முற்றும் உணர்ந்த இந்து தர்ம முறையறியாமல்
தெற்றுக் கூறும் தீயர்மனம் திருந்தச் செய்குவோம் *(இந்து)*

அன்புவழி காட்டுவதும் இந்து தர்மமே
இன்பநிலை கூட்டுவதும் இந்து தர்மமே
முன்பு உலகை உயர்த்தியதும் இந்து தர்மமே
துன்ப நிலை போக்குவதும் இந்து தர்மமே *(இந்து)*

உனது நாடு உனது வேதம் உரிமை காக்கவா
தனது மானம் தனது மதம் தர்மம் காக்கவா
இனிய பூமி எங்கள் பூமி என்று சொல்லவா
புனித மதம் இந்து மதம் என்று புகழவா. *(இந்து)*
ௐௐௐௐௐௐௐௐௐ

(19) துள்ளித் துள்ளி விளையாடுவோ..ம் - நாங்கள்
ஒன்றாய்ப் பாடிப் பாடி ஆடுவோம்
பேரானந்தப் பிள்ளைகள் அல்..லவோ - நாம்
ஆனந்தம் ஆனந்தம் ஆனந்தம்.

தந்தான தானானா.. தானா தந்தான தனானா..
தந்தான தானானா.. தானா தந்தான தனானா

அச்சமில்லை அச்சம் இல்லை.. - நாங்கள்
தெய்வக் குழந்தைகள் அல்லவோ.
தூய உள்ளக் குழந்தைகள் அல்..லவோ - நாம்
ஆனந்தம் ஆனந்தம் ஆனந்தம்.

தந்தான தானானா.. தானா தந்தான தனானா..
தந்தான தானானா.. தானா தந்தான தனானா

நம்பிக்கை நம்பிக்கை எம்மேல்.. - என்றும்
நம்பிக்கை நம்பிக்கை தெய்வத்தில்..
தாரக மந்த்ர மிதல்லவோ.. - என்றும்
ஆனந்தம் ஆனந்தம் ஆனந்தம்.

தந்தான தானானா.. தானா தந்தான தனானா..
தந்தான தானானா.. தானா தந்தான தனானா

ௐௐௐௐௐௐௐௐௐ

(20) ஒளிபடைத்த கண்ணினாய் வா வா வா
உறுதி கொண்ட நெஞ்சினாய் வா வா வா
களிபடைத்த மொழியினாய் வா வா வா
கடுமை கொண்ட தோளினாய் வா வா வா
தெளிவு பெற்ற மதியினாய் வா வா வா
சிறுமை கண்டு பொங்குவாய் வா வா வா
எளிமை கண்டு இரங்குவாய்வா வா வா
ஏறுபோல் நடையினாய் வா வா வா
மெய்ம்மை கொண்ட நூலையே அன்போடு
வேதமென்று போற்றுவாய் வா வா வா

பொய்ம்மை கூற லஞ்சுவாய்வா வா வா
பொய்ம்மை நூல்களெற்றுவாய் வா வா வா
நொய்ம்மை யற்ற சிந்தையாய் வா வா வா
நோய்களற்ற உடலினாய் வா வா வா
தெய்வ சாபம் நீங்கவே நங்கள் சீர்ச்
தேசமீது தோன்றுவாய் வா வா வா

இளைய பாரதத்தினாய் வா வா வா
எதிரிலா வலத்தினாய் வா வா வா
ஒளியிழந்த நாட்டிலே நின்றேறும்
உதய ஞாயிறொப்பவே வா வா வா
களையிழந்த நாட்டிலே முன்போலே
களை சிறக்க வந்தனை வா வா வா
விளையு மாண்பு யாவையும் பார்த்தன்போல்
விழியினால் விளக்குவாய் வா வா வா

வெற்றி கொண்ட கையினாய் வா வா வா
விநயம் நின்ற நாவினாய் வா வா வா
முற்றி நின்ற வடிவினாய் வா வா வா
முழுமை சேர்முகத்தினாய் வா வா வா

கற்ற லொன்று பொய்க்கிலாய் வா வா வா
கருதிய தியற்றுவாய் வா வா வா
ஒற்றுமைக்கு ளுய்யவே நாடெல்லாம்
ஒரு பெருஞ்செயல் செய்வாய் வா வா வா
ௐௐௐௐௐௐௐௐௐ

(21) ஓடி விளையாடு பாப்பா! - நீ
ஓய்ந்திருக்க லாகாது பாப்பா!
கூடி விளையாடு பாப்பா! - ஒரு
குழந்தையை வையாதே பாப்பா! (ஓடி)

சின்னஞ்சிறு குருவி போல - நீ
திரிந்து பறந்து வா பாப்பா!
வண்ணப் பறவைகளைக் கண்டு - நீ
மனதில் மகிழச்சிகொள்ளு பாப்பா! (ஓடி)

காலை எழுந்தவுடன் படிப்பு - பின்பு
கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு:
மாலை முழுதும் விளையாட்டு - என்று
வழக்கப் படுத்திக்கொள்ளு பாப்பா! (ஓடி)

பொய் சொல்லக் கூடாது பாப்பா! - என்றும்
புறஞ்சொல்ல லாகாது பாப்பா!
தெய்வம் நமக்குத்துணை பாப்பா! - ஒரு
தீங்குவர மாட்டாது பாப்பா! (ஓடி)

பாதகஞ் செய்பவரைக் கண்டால் - நாம்
பயங்கொள்ளலாகாது பாப்பா!
மோதி மிதித்துவிடு பாப்பா! - அவர்
முகத்தில் உமிழ்ந்துவிடு பாப்பா! (ஓடி)

துன்பம் நெருங்கிவந்த போதும் - நாம்
சோர்ந்துவிட லாகாது பாப்பா!
அன்பு மிகுந்த தெய்வ முண்டு - துன்பம்
அத்தனையும் போக்கிவிடும் பாப்பா! (ஓடி)

வடக்கில் இமயமலை பாப்பா! - தெற்கில்
வாழும் குமரிமுனை பாப்பா!
கிடக்கும் பெரியகடல் கண்டாய் - இதன்
கிழக்கிலும் மேற்கிலும் பாப்பா! (ஓடி)

வேத முடையதிந்த நாடு - நல்ல
வீரர் பிறந்த திந்த நாடு:
சேதமில் லாதஹிந்துஸ் தானம் - இதைத்
தெய்வமென்று கும்பிடடி பாப்பா! (ஓடி)

சாதிகள் இல்லையடி பாப்பா! - குலத்
தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்!
நீதி, உயர்ந்தமதி, கல்வி அன்பு

நிறைய உடையவர்கள் மேலோர். (ஓடி)

உயிர்க ளிடத்தில் அன்பு வேணும் - தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும்
வயிர முடைய நெஞ்சு வேணும் - இது
வாழும் முறைமையடி பாப்பா! (ஓடி)

ॐ ॐ ॐ ॐ ॐ ॐ ॐ ॐ ॐ

(22) சங்கராய சங்கராய சங்கராய மங்களம்
சங்கரீ மனோஹராய சாச்வதாய மங்களம் *(சங்க)*

கஜானனாய மங்களம் ஷடானனாய மங்களம்
குருபராய மங்களம் குருதேவாய மங்களம் *(சங்க)*

ஸ்ரீ ஸீதாராம மங்களம் ஸ்ரீ ராதாக்ருஷ்ண மங்களம்
ஸ்ரீ ராமக்ருஷ்ண மங்களம் ஸ்ரீ சாரதாயை மங்களம்
ஸ்ரீ சாரதாயை மங்களம் ஸ்ரீ விவேகானந்த மங்களம்
ஸ்ரீ விவேகானந்த மங்களம் சர்வதேவ மங்களம். *(சங்க)*

ॐ ॐ ॐ ॐ ॐ ॐ ॐ ॐ ॐ

## ke;jpuq;fs;

ஓம் ஸஹ நாவவது
ஸஹ நௌ புனக்து
ஸஹ வீர்யம் கரவாவகை
தேஜஸ்விநா - வதீதமஸ்து மா வித்விஷாவஹை

ஓம் சாந்தி: சாந்தி: சாந்தி:

ஓம்! (குருசிஷ்யர்களாகிய எங்கள்) இருவரையும் சேர்த்து (பிரம்மம்) காப்பாற்றட்டும், சேர்த்துப் போஷிக்கட்டும். இருவரும் சேர்ந்து வீரியத்துடன் உழைப்போமாக. எங்கள் அத்தியயனம் ஒளி பொருந்தியது ஆகவேண்டும். நாங்கள் ஒருவரையொருவர் பகைத்துக் கொள்ளாமலிருக்க வேண்டும்.

ஓம். மூவகையிலும் சாந்தி நிலவுக.

ॐ ॐ ॐ ॐ ॐ ॐ ॐ ॐ ॐ

ஓம் அஸதோ மா ஸத்கமய
தமஸோ மா ஜ்யோதிர்கமய
ம்ருத்யோர்மா அம்ருதம் கமய

ஓம் சாந்தி: சாந்தி: சாந்தி:

ஓம்! அசத்தியத்திலிருந்து சத்தியத்திற்கு என்னை அழைத்துச் செல்வா-யாக! அஞ்ஞான இருளிலிருந்து மெய்ஞான ஒளிக்கு என்னை அழைத்துச் செல்வாயாக! மரணத்திலிருந்து மரணமில்லாப் பெருநிலைக்கு என்னை அழைத்துச் செல்வாயாக! ஓம்.

ॐ ॐ ॐ ॐ ॐ ॐ ॐ ॐ ॐ

ஓம் தேஜோSஸி தேஜோ மயி தேஹி
வீர்யமஸி வீர்யம் மயி தேஹி
பலமஸி பலம் மயி தேஹி
ஓஜோSஸி ஓஜோ மயி தேஹி
மன்யுரஸி மன்யும் மயி தேஹி
ஸஹோSஸி ஸஹோ மயி தேஹி

ஓம் சாந்தி: சாந்தி: சாந்தி:

ஓம் இறவைா, நீ எல்லையற்ற ஆற்றல், எனக்கு ஆற்றலைக் கொடு. நீ எல்லையற்ற வீரியம், எனக்கு வீரியத்தைக் கொடு. நீ எல்லையற்ற வலிமை, எனக்கு வலிமையைக் கொடு. நீ எல்லையற்ற ஊக்கம், எனக்கு ஊக்கத்தைக் கொடு. நீ எல்லையற்ற வீரம், எனக்கு வீரத்தைக் கொடு. நீ எல்லையற்ற உறுதி, எனக்கு உறுதியைக் கொடு.

ௐௐௐௐௐௐௐௐௐ

ஓம் ஸர்வே பவந்து ஸுகின :
ஸர்வே ஸந்து நிராமயா :
ஸர்வே பத்ராணி பச்யந்து
மா கச்சித் துக்கபாக் பவேத்

ஓம் சாந்தி: சாந்தி: சாந்தி:

ஓம். எல்லோரும் நலமாக வாழ்க! எல்லோரும் நோயின்றி வாழ்க! எல்லோருக்கும் மங்களம் உண்டாகுக! யாரும் துன்புறாதிருக்கட்டும்!

ௐௐௐௐௐௐௐௐௐ

ஓம் பிரம்மார்ப்பணம் பிரம்ம ஹவிர்
பிரம்மாக்னௌ பிரம்மணா ஹுதம்
பிரம்மைவ தேன கந்தவ்யம் பிரம்மகர்மசமாதினா
ஓம் சாந்தி : சாந்தி : சாந்தி :

ௐௐௐௐௐௐௐௐௐ

ஒருவன் எப்போதும் உண்மையையே பேசுகிறவனாக இருந்தால் அல்லாமல் உண்மையே உருவான இறைவனைக் காண முடியாது.

***

==============================

வெறும் ஏட்டுக் கல்வியால் மனிதனுக்கு ஆவதென்ன? பிராத்தனையும் ஆத்மசாதனமும் அவனுடைய முன்னேற்றத்திற்கு அவசியமானவை.

*- பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ணர்*

ஷஷஷஷஷஷஷஷஷ

## <u>மனிதனுள் தெய்வீக சக்தி</u>

ஒவ்வொரு ஆன்மாவிலும் தெய்வீக சக்தி ஒளிந்து கிடக்கிறது. அந்த தெய்வீக சக்தியை வெளிக்கொண்டு வருவதுதான் நம் வாழ்க்கையின் இலட்சியம். இதற்காகப் புறவாழக்கையிலும் அகவாழ்க்கையிலும் கட்டுப்பாட்டுடன் நடந்துகொள்வோம்.

ராஜ யோகத்தினாலோ, கர்ம யோகத்தினாலோ, பக்தி யோகத்தினாலோ, ஞான யோகத்தினாலோ, ஒன்றாலோ, பலவற்றாலோ, அனைத்தின் உதவியாலோ இந்த இலட்சியத்தை எட்டிப்பிடியுங்கள். சுதந்திரம் அடையுங்கள். இதுதான் உண்மையான சமயம். இதற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். வறட்டுக் கொள்கைகளும், பிடிவாதக் கருத்துக்களும், சடங்குகளும், நூல்களும், வழிபாட்டு இடங்களும், புறச் சின்னங்களும் இரண்டாந்தர முக்கியத்துவம் உடையவையே.

***

இந்த உலகம் கோழைகளுக்கல்ல, ஓட முயலாதே, வெற்றியையோ, தோல்வியையோ எதிர்பார்க்காதே.

***

சுயநலமே ஒழுக்கக் கேடு. சுயநலமின்மையே நல்லொழுக்கம். இதுவே ஒழுக்கத்திற்கு நாம் கொடுக்கக் கூடிய ஒரே இலக்கணமாகும்.

***

மணிக்கணக்கில் நிறையப் பேசுவதைக் காட்டிலும் குறைந்தளவு காரியங்களைச் செய்வது மேலானது.

- *சுவாமி விவேகானந்தர்*

ஷஷஷஷஷஷஷஷ

தீய சொல் பேசுவதை விட மௌனம் சிறந்தது.

எளஎ

நம்பிக்கையும் உறுதியுமே அடிப்படை. இவை இரண்டும் இருந்தால் எல்லாம் இருந்த மாதிரித்தான்.

- *அன்னை ஸ்ரீ சாரதாதேவியார்*

ஷஷஷஷஷஷஷஷ

ஒருவன் செய்யத் தகாத செயல்களைச் செய்வதனால் கெடுவான். செய்யத் தக்க செயல்களைச் செய்யாமல் விடுவதனாலும் கெடுவான்.

- *திருவள்ளுவர்*